ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.08.18 |

# காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி[1] – 2022இன் முதலாமரையாண்டு

## முக்கிய விடயங்கள்

| காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி | ஆண்டு அதிகரிப்பு |
|---|---|
| குறிகாட்டிப் பெறுமதி | 17.0 % |
| **186.9** | அரையாண்டு[2] அதிகரிப்பு 4.6 % |

### காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி ஆண்டு சதவீத அதிகரிப்பு




### காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியின் புவியியல் உள்ளடக்கம் 2017 முதல்: கொழும்பு மாவட்டம்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொழும்பு மாவட்டத்தின் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியானது 2022இன் முதலாமரையாண்டு காலப்பகுதியின் போது ஆண்டுக்காண்டு 17.0 சதவீத மாற்றத்தினால் 186.9 ஆக அதிகரித்தது. காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் ஆண்டு அதிகரிப்பும் (17.0) அரையாண்டு அதிகரிப்பும் (4.6 சதவீதம்) 2021இன் அரையாண்டுப் பகுதியில் அவதானிக்கப்பட்ட அதிகரித்த போக்கின் வீழ்ச்சியைக் காண்பித்தன.

காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் அனைத்துத் துணைக் குறிகாட்டிகளும் அதாவது, வதிவிடக் காணி விலைமதிப்பீட்டு குறிகாட்டி, வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி மற்றும் கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி ஆகிய அனைத்தும் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளன. கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி 20.6 சதவீதம் கொண்ட அதிகூடிய ஆண்டு அதிகரிப்பினைப் பதிவுசெய்து, அதனைத் தொடர்ந்து வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியும் வதிவிடக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியும் காணப்பட்டன.

### காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி அசைவுகள் (2017 முதலரை = 100)




### காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டிகளும் வளர்ச்சி வீதங்களும்[3]

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி (தளக் காலப்பகுதி: 2017 1ஆம் அரை) | குறிகாட்டிப் பெறுமதி | | | | | | ஆண்டுச் சதவீத மாற்றம் | | | | அரையாண்டு[2] சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை | 2021 2ஆம் அரை | 2022 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை | 2021 2ஆம் அரை | 2022 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை | 2021 2ஆம் அரை | 2022 1ஆம் அரை |
| வதிவிடக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 136.6 | 144.9 | 152.0 | 159.3 | 176.3 | 183.4 | 11.3 | 9.9 | 15.9 | 15.1 | 4.9 | 4.8 | 10.6 | 4.0 |
| வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 135.5 | 142.0 | 148.7 | 158.7 | 173.4 | 182.8 | 9.8 | 11.8 | 16.6 | 15.2 | 4.8 | 6.7 | 9.3 | 5.4 |
| கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 139.4 | 146.1 | 154.1 | 161.3 | 186.6 | 194.6 | 10.5 | 10.4 | 21.1 | 20.6 | 5.5 | 4.7 | 15.6 | 4.3 |
| **காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி** | **137.2** | **144.3** | **151.6** | **159.8** | **178.7** | **186.9** | **10.5** | **10.7** | **17.9** | **17.0** | **5.1** | **5.4** | **11.9** | **4.6** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட காணி விலைச் சுட்டெண் 2019இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டிருக்கிறது.

[2] இவ்வரையாண்டிற்கான காணி மதிப்பீட்டுக் குறிகாட்டியின் சதவீத மாற்றம் முன்னைய ஆண்டின் அரைப்பகுதியுடன் ஒப்பிடப்பட்டது.

[3] காணி மதிப்பீட்டு குறிகாட்டியின் (2017 அ1= 100) முழு தொடர்களும் அவற்றின் மதிப்பீட்டு முறைமைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களுடன் அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2022 யூனில் திருத்தப்பட்டன. திருத்தப்பட்ட தொடர்கள் இலங்கை மத்திய வங்கியின் தரவு நூலகத்தினூடாக தரவிறக்கம் செய்யப்படக்கூடியதாகவிருக்கும் (https://www.cbsl.lk/eresearch/).

## *தொழில்நுட்பக் குறிப்பு:*

***தரவு மூலம்***

பேர்ச் ஒன்றுக்கான வெற்றுக் காணி விலை அரையாண்டு அடிப்படையில் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

***உள்ளடக்கமும் கால இடைவெளியும்***

காணி விலைச் சுட்டெண் கொழும்பு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி 1998 இலிருந்து 2008 வரை ஆண்டு அடிப்படையிலும் 2009 இலிருந்து 2017 வரை அரையாண்டு அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து 2017 இலிருந்து புவியியல் உள்ளடக்கம் கொழும்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டதுடன் இது 2017இன் முதலரைப்பகுதியைப் பரிசீலனையில் கொண்டு அடிப்படைக் காலமாக மீள்தளப்படுத்தப்பட்டது. 2020 இலிருந்து காணி விலைச் சுட்டெண் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டதுடன் அரையாண்டு அடிப்படையில் இது வெளியிடப்பட்டு வருகிறது

***முறையியல்***

காணிப் பயன்பாட்டின் பல்லினத் தன்மையினைக் கருத்திற்கொண்டும் சீர்மையினைப் பேணும் பொருட்டும் வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான மூன்று துணைக் குறிகாட்டிகளும் பிரதேசத்தில் உள்ள பேர்ச் சராசரி ஒன்றுக்கான சராசரி வெற்றுக் காணி விலையினை பயன்படுத்தி ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் வெவ்வேறாகக் கணிப்பிடப்படுகின்றன. காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியானது இம் மூன்று துணைக் குறிகாட்டிகளினதும் எளிய சராசரியாகும்.